සීමා නිර්ණය කොමිෂන් සභාව
# எல்லை நிர்ணய ஆணைக்குழு
**DELIMITATION COMMISSION**

කාර්තුමය ප්‍රගති වාර්තාව
**2017 – 1 වැනි කාර්තුව**

**காலாண்டு செயலாற்றுகை அறிக்கைகள்**
2017 - 1ம் காலாண்டு

## Quarterly Performance Report
## 2017 - 1st Quarter

**இலங்கை எல்லை நிர்ணய ஆணைக்குழு**

**2017 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டு அறிக்கை**

**(2017 சனவரி 1 ஆம் திகதி தொடக்கம் 2017 மார்ச் 31 ஆம் திகதி வரை)**

**பின்னணி**

- இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 41 ஆ மற்றும் 95(1) உறுப்புரைகளுக்கு அமைவாக தற்போதைய எல்லை நிர்ணய ஆணைக்குழு தாபிக்கப்பட்டது. அதிமேதகு சனாதிபதி அவர்களால் நியமனம் செய்யப்பட்ட ஆணைக்குழுவின் தவிசாளராக கலாநிதி கே. தவலிங்கம் அவர்கள் பதவி வகிப்பதோடு, அதன் அங்கத்தவர்களாக கலாநிதி அனிலா டயஸ் பண்டாரநாயக்க மற்றும் பேராசிரியர் எஸ்.எச். ஹஸ்புல்லாஹ் ஆகியோர் பதவி வகிக்கின்றனர்.
- எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் பணிப்பொறுப்புக்கள் தற்போதைய அரசியலமைப்பில் தெளிவுபடுத்தப்படவில்லை. இதனிடையே இலங்கையின் பல சட்டங்கள் மற்றும் செயலொழுங்குகள் ஊடாக வாக்கெடுப்பு மாவட்டங்கள் மற்றும் நிருவாக மட்டத்தில் வெவ்வேறு வகையான எல்லைகளை நிர்ணயம் செய்தல் தொடர்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. நாட்டிற்கு உயர்ந்தபட்ச நன்மைக்காக இந்த நியதிச் சட்டங்கள் தர்க்க ரீதியாகத் தயாரிக்கப்படல் வேண்டும். புதிய யாப்புத் திருத்தத்தின் போது ஒரு எல்லை நிர்ணய ஆணைக்குழு மாத்திரம் தாபிக்கப்படுவதோடு, அதற்கு கையளிக்கப்படுகின்ற பணிகளின் கீழ் அனைத்து எல்லை நிர்ணயங்களும் தர்க்கரீதியாக வடிவமைக்கப்படுமென அரசியலமைப்புப் பேரவையினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- கடந்த மூன்று மாதங்களினுள் ( 2017 சனவரி 1 ஆம் திகதி தொடக்கம் 2017 மார்ச் 31 ஆம் திகதி வரை ) எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் மூன்று கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

    - 2017 சனவரி 20
    - 2017 மார்ச் 06
    - 2017 மார்ச் 29

**பதவிநிலை விடயங்கள்**

- **நிருவாக அலுவலர்** - திரு. ஏச் டீ. ஜயவீர அவர்கள் 2017.06.01 ஆம் திகதி கடமைகளைக் கையேற்கவுள்ளார்.
- **புதிய பதில் கடமை நியமனம்** - 2017.03.21 ஆம் திகதி தொடக்கம் ஒரு வருடத்திற்கு மேலதிகத் தேர்தல்கள் ஆணையாளர் திரு சமன் சிறி ரத்நாயக்க அவர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.
- **முன்னாள் பதில் கடமை செயலாளர்** - இப்பதவியில் முன்னர் கடமையாற்றிய மேலதிகத் தேர்தல்கள் ஆணையாளர் அவர்களுக்கு தேர்தல்கள் திணைக்களத்தினுள் கிடைக்கப்பெற்ற பதவியுயர்வு காரணமாக எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் செயலாளர் பதவியிலிருந்து கேட்டு விலகினார். செயலாளராக அவர் ஆற்றிய பணிகள் ஆணைக்குழுவினால் பாராட்டப்பட்டது. அவரது சேவையைப் பராட்டி கடிதமொன்றை அனுப்பி வைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது.
- கணக்காளர் பதவியின் பதில் கடமைக் காலத்தை கால நீடிப்புச் செய்தல் - கணக்காளர் திரு. எச்.டப்ளிவ்.என். குமார அவர்களின் பதவிக் காலம் மார்ச் மாதம் 31 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளது. அவரின் பதவிக் காலத்தை மேலும் ஒரு வருடத்திற்கு கால நீடிப்புச் செய்ய நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளது.

**அரசியலமைப்பு பேரவையினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கமைய எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்**

அரசியலமைப்பு பேரவையினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கமைய எல்லை நிர்ணய ஆணைக்குழுவினால் பாராளுமன்றம், மாகாண சபை மற்றும் உள்ளூர் அதிகார சபைகள் என்பவற்றின் எல்லைகளை நிர்ணயம் செய்வதற்கான முன்மொழிவொன்று தயாரிக்கப்பட்ட வண்ணம் உள்ளது.

**வேறு பணிகள் தொடர்பில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்**

கீழே காட்டப்பட்டுள்ள வியங்கள் முன்மொழியப்பட்டு அவற்றை நடைமுறைப்படுத்து தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்துவதற்காக எல்லை நிர்ணயம் தொடர்பான தகவல்களை திட்டமிடுதல், சேகரித்தல், இலங்கையின் தற்போதைய சனத்தொகை மற்றும் காணிப் பயன்பாடு தொடர்பான முதன்மை விடயங்கள் பற்றி கடந்த எல்லை நிர்ணய அறிக்கையைப் பகுப்பாய்வு செய்தல்.

**எல்லை நிர்ணய ஆணைக்குழுவிற்காக முன்னர் தயாரிக்கப்பட்ட நோக்கு மற்றும் பணிக்கூற்றை மீளாய்வு செய்தல்**

இவ்விடயம் தொடர்பாக பல சுற்றுக் கலந்துரையாடல் நடாத்தப்பட்டன. நிறுவனம் இவ்விடயம் தொடர்பாக கொண்டுள்ள கருத்துக்கள் புதிய அனுகுமுறையுடன் கூடியதாக நிகழ் காலத்திற்குப் பொருந்தும் விதத்தில் மீளாய்வு செய்யப்பட வேண்டுமென ஆணைக்குழுவினால் அவதானிக்கப்பட்டது. தவிசாளர் மற்றும் அங்கத்தவர்களின் கருத்துக்களைப் பெற்றுக் கொண்டு இவ்விடயம் தொடர்பாக செயற்படுமாறு கலாநிதி அனிலா டயஸ் பண்டாரநாயக்க அவர்களுக்கு கையளிக்கப்பட்டது. கடந்த கூட்டத்தின் போது அங்கத்தவர்களினால் ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ள ஆவணம் தொடர்பாக இறுதி பரிசீலனை செய்யப்பட்டது. அவ்வாவணத்தை ஏற்றுக் கொள்வதெனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை அரசியலமைப்பு பேரவையின் அவதானத்திற்குச் சமர்ப்பிப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

**எல்லை நிர்ணயம் தொடர்பான எண்ணக்கருவை தெளிவுபடுத்தல்.**

இது தொடர்பான விடயங்கள் கலந்துரையாடப்பட்டது. இலங்கையை மாகாண உப பிரிவுகளாகப் பிரிப்பதற்காக கிராம அலுவலர் பிரிவு எல்லைகளை மீள் நிர்ணயம் செய்வதற்கு காணிகள் . வளங்கள் மற்றும் சனத்தொகைப் பரம்பல் ஆகியவற்றைப் பகுப்பாய்வு ரீதியாக வகைப்படுத்த வேண்டுமென கலாநிதி அனிலா டயஸ் பண்டாரநாயக்க அவர்கள் முன்மொழிந்தார். அம்முன்மொழிவு ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

**அலுவலக அடையாள அட்டை**

எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் அங்கத்தவர்களுக்கு அலுவலக அடையாள அட்டை வழங்குவது தொடர்பாக கலந்துரையாடப்பட்டதன் விளைவாக அலுவலக அடையாள அட்டையொன்றை வழங்குவதற்கு நடவடிக்கையெடுப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

**எல்லை நிர்ணயம் மற்றும் திருத்தங்கள் தொடர்பான தகவல்கள் பற்றிய வர்த்தமானி அறிவித்தல்களை உள்ளூர் அதிகார சபைகள் மற்றும் பிரதேச செயலகங்களிலிருந்து சேகரித்தல்.**

இவை தொடர்பான ஆவணங்களை ஓர் அரச நிறுவனத்திடமிருந்து அல்லது நிலையத்திடமிருந்து பெற்றுக் கொள்ள முடியாமை காரணமாக அத்தகவல்கள் உள்ளூர் அதிகார சபைகள் மற்றும் பிரதேச செயலகங்களிலிருந்து உசாவப்பட்டது. சில அலுவலகங்ளிலிருந்து திருப்திகரமான பதில்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. ஏனைய அலுவலகங்ளிலிருந்தும் திருப்திகரமான பதில்கள் கிடைக்கப்பெறுமென நம்புகின்றோம்.

**தயாரிக்கப்பட்ட மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகள்.**

- எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் கூட்டங்கள் தொடர்பான அறிக்கைகள் தொகுக்கப்பட்டு அவை தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.
- செயலாற்றுகை அறிக்கை – நான்காம் காலாண்டு (2016 ஒக்தோபர் தொடக்கம் திசெம்பர் வரை) தொடர்பான செயலாற்றுகை அறிக்கை தயாரிக்கப்பட்டு அது தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.
- 2016 ஆம் ஆண்டுக்கான முதலாம் காலாண்டு தொடக்கம் நான்காம் காலாண்டு வரையான அறிக்கைகளை அடிப்படையாக் கொண்டு வருடாந்த செயலாற்றுகை அறிக்கையைத் தயாரிப்பதற்கு கலாநிதி அனிலா டயஸ் பண்டாரநாயக்க அவர்கள் இணக்கம் தெரிவித்தார். 2016 ஆம் ஆண்டின் இறுதிக் கணக்கறிக்கை மற்றும் 2017 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகள் செயலாற்றுகை அறிக்கையில் உள்ளடக்கப்பட்டது.

**வளங்கள் மையம்**

எல்லை நிர்ணய விடயம் தொடர்பான இணக்கப்பாடு மற்றும் அரச அலுவலர்களிடம் காணப்படும் அறிவை விருத்தி செய்வதற்காக அவை தொடர்பான எழுத்தாவணங்களையும் மற்றும் தகவல்களையும் சேகரிப்பதற்கு வளங்கள் நிலையமொன்றைத் தாபிப்பதற்கு எல்லை நிர்ணய ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டது. இதற்குத் தேவையான நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளன.